RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt2317

OPEN ACCESS

# திருமூலர் கூறும் கல்விக்கொள்கைகள்

**க. சுகன்யா [அ, *], த. சுவாமிநாதன் [அ]**

[அ] தமிழ்த்துறை, அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்-612002, தமிழ்நாடு, இந்தியா

# Thirumoolar's Educational Policies

**G. Suganya [a, *], T. Swaminathan [a]**

[a] Department of Tamil, Government Arts College (Autonomous), Kumbakonam-612002, Tamil Nadu, India

* Corresponding Author: suganyasabariselvan@gmail.com

Received: 07-06-2022
Revised: 27-10-2022
Accepted: 10-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

Saivism is one of the oldest religions in our country. The Saiva saints gave 'Panniru Thirumuraikal (Thirumurai is a twelve-volume compendium of songs or hymns in praise of Shiva)' to instill in the minds of the people of the world the feeling of God. Thirumanthiram by Thirumoolar is the 10th Thirumarai among the religious books of such a special Thirumarai Panuval (Thirumurai Discourses). Thirumoolar has created a book that explains the good life, the system, and the subtleties of Jnana Yoga (The Path of attaining Knowledge) for all the people of the world to undertake. In Thirumanthiram, Thirumoolar has effectively laid down the principles of education, questioning, and illiteracy for the well-being of the people of the country. Education is the basis of the principle of individual morality. Education is something that enables an individual to excel in life. Education has the power to change society. If every human being is to have good discipline, there must be education. That is why our great sages have emphasized the importance of education in their books. Thirumoolar, a Saiva devotee, has also explained the education of individual life in Thirumanthiram. He has emphasized the significance of wisdom education in enabling man to live as a human being. This thesis explains the educational principles that Thirumoolar proposed for the betterment of individual lives.

**Keywords:** Thirumurai, Thirumoolar, Education, Principles, People, Country

## முன்னுரை

தனிமனித ஒழுக்கக்கொள்கைக்கு அடிப்படையாக விளங்குவது கல்வி ஆகும். தனிமனித வாழ்க்கை மேன்மை அடைய ஏதுவாக இருப்பது கல்வி ஒரு சமுதாயத்தை மாற்றும் சக்தி கல்விக்குண்டு. ஒவ்வாரு மனிதனுக்கும் சிறந்த ஒழுக்கம் இருக்க வேண்டுமென்றால் கல்வி அமைந்து இருக்கவேண்டும். எனவேதான் நமது சான்றோர் பெருமக்கள் தங்கள் நூல்களில் கல்வியின் மகத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர். சைவ அடியாரான திருமூலரும் தனி மனித வாழ்விற்குரிய கல்வியை திருமந்திரத்தில் எடுத்துரைத்துள்ளார். மனிதன் மனிதாக வாழ்வதற்கு ஏற்ற ஞானக் கல்வியின் மகத்துவத்தை குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுரையின் மூலமாக திருமூலர் திருமந்திரத்தில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்த கல்விக் கொள்கைகள் குறித்து விரிவாகக் காண்போம்.

## திருமூலரின் கல்விக்கொள்கை

தனி மனித ஒழுக்கக் கொள்கைக்கு அடிப்படையாக விளங்குவதும் கல்வியாகும். தனிமனித வாழ்க்கை மேன்மையடைய ஏதுவாக இருப்பது கல்வி. ஒரு சமுதாயத்தை மாற்றும் சக்தி

கல்விக்குண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் சிறந்த ஒழுக்கம் இருக்கவேண்டுமென்றால் கல்வி அமைந்திருக்கவேண்டும். எனவே தான் நமது சான்றோர்கள் கல்வியின் சிறப்பினை நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

திருமூலரும் திருமந்திரத்தில் தனிமனித வாழ்விற்குரிய ஒழுக்கங்களை கல்வியின் மூலமாக குறிப்பிட்டுள்ளார். திருமூலரின் கல்விக்கொள்கை தனித்தன்மை வாய்ந்தது. மனித வாழ்விற்குரிய மகத்தான கருத்துக்களை பொதித்து பாடிய திறம் போற்றுதற்குரியதாகும். திருமந்திரத்தில் கல்வி, கேள்வி கேட்டு அமைதல், கல்லாமை எனும் தலைப்புகளில் கல்வி குறித்த கொள்கைகளை வகுத்துள்ளார் திருமூலர். சமுதாயத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடம் இருக்கவேண்டிய தகுதிகள், மாணவரிடம் கூடா பண்புகள், மாணவர் ஆசிரியர் உறவுமுறை, ஆசிரியரின் உயரிய சிறப்புகள், ஆசிரியரை இழித்துரைப்பவர் அடையும் வேறு ஆகியவை ஆகியவை பற்றி திருமந்திரத்தில் நாட்டு மக்களுக்கு கல்விக் கொள்கைகளை குறிப்பிட்டுள்ளார்.

மனிதனின் இறை உணர்வை தூண்டும் வண்ணம் இறைஞானக் கல்வியை திருமந்திரத்தில் வகுத்துக் குறிப்பிட்டுள்ளார். தனிமனிதன் தன் வாழ்வை மேன்மைப்படுத்திக் கொள்ள ஏதுவான ஞானக்கல்வியை புகட்டியுள்ளார். திருமூலர் கல்விக் கற்றவர் வாழ்வில் பின்பற்றும் வண்ணம் திருந்திரங்களை யாத்து இருப்பது போற்றுதற்குரியதாகும்.

இறைவன் மனிதனின் வினைக்கேற்ப உடலை படைத்தான். உயர்களிடம் மாறா அன்பு கொண்டு அவற்றுடன் பிரிப்பின்றிக் கலந்து இயக்குகின்றான். திருவைந்தெழுந்து முறையால் தன்னை எண்ணியிருப்பவர் உள்ளத்தில் உவப்புடன் புகுந்தருளுகின்றான். அவனது அருளைப் புரிவிக்கும் திருவைந்தெழுத்து மெய்யுணர்வுக் கல்வியாகும் என்கிறார் திருமூலர்.

"குறிப்பறிந் தேனுடல் உயிரது கூடிச்

செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை

மறிப்பறி யாவதுவந் துள்ளம் புகுந்தான்

கறிப்பறி யாமிகும் கல்விகற் றேனே"

எனும் மந்திரத்தில் தேவரின் தலைவனான இறைவன் எந்தவிதத் தடையும் இன்றி என் மனத்தைக் கண்டு இடமாக்கிக் கொண்டான். உவர்ப்பு ஏற்படுத்தாத அனுபவக்கல்வியை கற்றேன் எனக்கூறியுள்ளார் (Manikkavasagan, 2006).

இறைவனை அறிவதே உண்மையான கல்வி என்று உலகத்தாருக்கு உணர்த்தியுள்ளார். உண்மைக் கல்வியைக் கற்றவர்க்கு வீடுபேறு உண்டு என்பதைக் கல்வி, கல்லாமை ஆகிய பகுப்புகளில் எடுத்தோதியுள்ளார். தாயுமானவரும்,

"அத்த னே அகண் டானந்த னே அருள்

சுத்த னேஎன உன்னைத் தொடர்ந்திலேன்

மத்த னேன்பெறு மாமலம் மாயவான்

கத்த னேகல்வி யாதது கற்கவே"

எனும் பாடலில் உண்மையான கல்வியென்றால் இறைவனை அறிவதே எனக்கூறியுள்ளார் (Manickam, 2005).

## இடைக்காட்டுச் சித்தரும்

"பொய்யான கல்வி கற்றுப்பொருள் மயக்கம் கொள்ளாமல்

மெய்ஞ்ஞானக் கல்வியினை விரும்புவாய் கல்மனமே"

எனும் பாடலில் ஞானக்கல்வியின் சிறப்பினைக் கூறியுள்ளார். வள்ளுவரும்,

“கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்”

எனும் குறட்பாவின் இறைவனின் திருவடியை வணங்காத கல்வி பயனற்றது எனக் கூறியுள்ளார் (Parimelalhagar, 2002).

## ஞானக்கல்வியின் தனிச்சிறப்பு

ஞானத்தின் வடிவமாக சிவபெருமான விளங்குகிறான். அவனை தொழுபவருக்கு ஞானக் கல்வியைப் போதிக்கிறான். மேலும், இறவாத புகழும் தந்தருளுகின்றான். எனவே திருமூலர் மக்களுக்கு இம்மைக்கு மட்டுமின்றி மறுமைக்கும் இன்பம் தருகின்ற ஞானக்கல்வியின் தனிச்சிறப்பினை எடுத்துரைத்துள்ளார். ஞானக் கல்வியின் சிறப்பினை,

"கற்றறிவாளர் கருதிய காலத்துக்

கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு

கற்றறி வாளர் கருதி உரைசெய்யும்

கற்றறி காட்டக் கயலுள வாக்குமே"

எனும் மந்திரத்தில், உண்மையான கல்வியைக் கற்றவர் எண்ணிப் பார்க்கும் போது அவர்களது கருத்தில் ஞானக்கண் புலனாகும் எனக் கூறியுள்ளார் (Manikkavasagan, 2006).

## ஞானக்கல்வியின் பயன்

திருமூலர் மக்கள் ஞானக்கல்வி கற்க வேண்டும் என்று மந்திரப்பாடல்களில் அறிவுறுத்தியுள்ளார். ஞானக்கல்வி கற்பதால் ஏற்படும் பயன்பாட்டையும் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். மக்களுக்கு அவர்கள் பாவங்கள் நீங்குவதற்கான வழிகளைப் பற்றி திருமூலர் பின்வரும்,

“நிற்கின்ற போதே நிலையுடைய யான்கழல்

கற்கின்ற செய்மின் கழிந்தாலும் பாவங்கள்

சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழதபின்

மற்றொன் றிலாத மணிவிளக் காமே”

எனும் மந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் (Manikkavasagan, 2006). உடலில் உயிர் இருக்கும்போதே இறைவனின் திருவடியை உறுதியாக எண்ணி இறைஞானம் பெற முயற்சி செய்யுங்கள்! அதனால் உங்கள் பாவங்கள் யாவும் அறும் எனக்கூறியுள்ளார்.

## பிறவிப்பிணிக்கு மருந்து

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கை சிறப்புடன் அமைய நல்ல அறநெறிகளை கடைப்பிடிக்கவேண்டும். திருமூலரும் தனிமனித வாழ்க்கை நலமுடன் வாழ தேவையான அறக்கொள்கைகளைப் பொதித்துப் பாடியருளியுள்ளார். திருமந்திரத்தில் மனித பிறவிப்பிணிக்குரிய மருந்து பற்றி,

“வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்

கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை"

எனும் மந்திர அடிகளில் திருமூலர் விளக்கியுள்ளார். அவற்றுள், மெய்ஞ்ஞான அறிவு மேன்மக்கள் பிறவித்துயரைப் போக்கவல்ல துணையாக, பிறவிப்பிணிக்கு மருந்தாக இருப்பார்கள். இந்த மெய்யறிவு பெற்றவர்களைத் துணைக் கொள்ளாதவர்கள் கல்வி அறிவு இல்லாதவர்கள் ஆவார் எனக்கூறியுள்ளார். மூதுரையும்,

"மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனில் கற்றோன் சிறப்புடையான் - மன்னற்குத்

தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்கிது

சென்ற இடமெல்லாம் சிறப்பு"

எனும் பாடலில் கற்றோரின் மேன்மையைக் குறிப்பிடுகிறது (Manikkavasagan, 2006).

## கேள்வி

ஒவ்வொரு மனிதனும் தன்னைவிட கல்வியில் வல்லவரிடம் போய், கேட்கத்தக்கவற்றைக் கேட்டு மனத்தால் அடங்கியிருத்தல் வேண்டும். அத்தகைய கேள்வி செல்வத்தைப் பெறுபவர்கள் அடையும் நற்பேறுகள் பற்றி அறநூல்கள் எடுத்துரைக்கின்றன. திருமூலரும் கேள்வி செல்வத்தின் மகத்துவத்தை திருமந்திரத்தில் விரிவாக விளக்கி கூறியுள்ளார். திருமந்திரத்தில் கேள்வி கேட்டமைதல் எனும் பகுப்பில் கேள்வி செல்வத்தின் சிறப்பினை பற்றி குறிப்பிடுவதைக் காணலாம்.

## கேள்வியால் அடையும் நற்பேறு

மக்கள் யாவரும் அறங்களைக் கேட்டும், அந்தணரின் அறிவுரைகளைக் கேட்டும், பாவங்கள் இவை என்று சொல்லும் நீதி நூல்களைக் கேட்டும், தேவர், வழிபாட்டுக்குரிய மந்திரங்களைக் கேட்டும், அயல் சமய நூல்களைக் கேட்டும் அயல் சமய நூல்களைக் கேட்டும், பொன்னார் மேனியனான எம்பெருமானின் தன்மையைக் கேட்டும் தெளிபவருச் சிவகதி கிடைக்கும் என்பதை,

"அறங்கேட்கும் அந்தணர் வாய்மொழி கேட்கும்

மறங்கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும்

புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் ஈசன்

திறங்கேட்கும் பெற்ற சிவகதி தானே"

எனும் மந்திரத்தில் திருமூலர் சிறப்பாக விளக்கியுள்ளார் (Manikkavasagan, 2006). வள்ளுவரும்,

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை"

எனும் குறட்பாவில் கேள்விச் செல்வத்தின் சிறப்பினைக் கூறியுள்ளார் (Parimelalhagar, 2002).

## உடம்பிற்கு உற்றதுணை

திருமூலர் கேள்வி கேட்டறிபவருக்குப் பிறவி நீங்கும் என்பதை,

"உறுதுணை யாவ துயிரும் உடம்பும்

உறுதுணை யாவ துலகுறு கேள்வி

செறிதுணை யாவது சிவனடி

பெறுதுணை கேட்கில் பிறப்பில்லை தானே"

எனும் மந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் (Manikkavasagan, 2006). உடம்பிற்கு சிறந்த துணையாவது உயிராகும். உயிருக்கு இணையாய் இருப்பதோ உலகத்திலுள்ள ஞானியர்களிடம் பெறும் கேள்வியாகும். அக்கேள்வி கேட்டறிந்தவருக்கு சிவபெருமான் துணையாக வந்து பிறவிப் பேற்றை நீக்கியருளுவான் என்று கூறியுள்ளார்.

இறைவன் மீது பற்றுக்கொள்பவருக்கு இறைவன் வந்து தானாக அருள்புரிவான். மக்கள் யாவரும் சிவநெறியை அறிவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி திருமூலர் எடுத்துரைத்துள்ளார். சிவநெறியை அறிந்தவர்கள் பெரும் சிறப்பினை எடுத்துக்கூறி மக்களுக்கு இறைநெறியை ஊட்டியுள்ளார். கேள்வி அறிவினால் மக்கள் அடையும் சிறப்பினை குறிப்பிட்டுள்ளார்.

## கல்லாமை

இறைவனாகிய ஒளியைக் கற்பது சாகாக்கல்வி என்பர். இது உயிருணரும் இன்பமாகும். இந்தப் பட்டறிவைப் பெறாமலிருத்தலே கல்லாமையாகும். இறை அடியார்களும் நாட்டு மக்களும் இறைஞானக் கல்வியை பற்றி தங்கள் இலக்கியங்களில் வலியுறுத்தியுள்ளனர். கல்லாமை இழிவுநிலைப் பற்றி குறிப்பிட்டு ஞானக்கல்வி பெறநாட்டு மக்களை திருமூலர் தூண்டியுள்ளார்.

திருமூலர் கல்லாமை எனும் பகுப்பில் கல்விக்கற்றும் சிவ அனுபவத்தை பெறாதவர்களின் நிலையை உலகத்தாருக்கு எடுத்துரைத்துள்ளார். ஆசிரியனிடம் சென்று முறையாகக் கல்வி கற்காதவர் என்றாலும், அவர்கள் தங்கள் நெஞ்சுக்குள் இறைக்காட்சியைக் காணும் மனப்பக்குவம் பெற்றவர்களாயிருப்பின், அவர்களை இறைவன் தன் அருட்பார்வையினால் ஆட்கொண்டு அருளுவான் என்பதை,

"கல்லாத வரும் கருத்து அறி காட்சியை

வல்லார் எனில் அருட்கண்ணான் மதித்துளோர்

கல்லாதார் உண்மை பற்றாநிற்பர், கற்றோரும்

கல்லாதார் இன்பம் காணுகிலாரோ"

எனும் மந்திரத்தில் திருமூலர் எடுத்துரைத்துள்ளார் (Manikkavasagan, 2006). மேலும், கல்வி கற்றும் சில அனுபவத்தைப் பெறாதவர்கள் கல்லாதவர்களாகக் கருதப்படுவர்.

சமூக மக்கள் சிவ அனுபவம் பெறவேண்டும். இறைவன் அருளால் எல்லா வளங்களையும் பெறலாம் என்பதை மக்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். கல்வியைச் சமய நோக்கில் கூறும் திருமூலர், சமூகத்தை நல்வழிப்படுத்த எண்ணிக் கூறியுள்ளார். இறைவன் அருள் இன்றி வாழ்க்கையில் நிலையான இன்பத்தை யாவரும் பெறமுடியாது என்று கூறலாம்.

## முடிவுரை

மானுட தர்மங்களை மையமாக கொண்ட இலக்கியமே நிலைபேறடையும், அவ்வகையில் நிலைபேறுடைய பக்தி இலக்கியங்களுள் ஒன்றான திருமந்திரத்தில் திருமூலர் மக்கள் வாழ்விற்குரிய கல்வி எனும் கொள்கையை சமய நோக்கில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். எனவே ஒவ்வொரு மனிதனும் திருமூலர் கூறிய இறைக்கல்வியை கற்றால் அவனது அருளால் உலகில் வாழ்வாங்கு வாழ்வர் என்பது திண்ணம்.

## References

Govindan, T. (2003) Siddhar Padalgal Pattinathar Muthal Bharathiyar, Paavai Publications, Chennai, India.

Gowmareeswari, S. (2010) Needhi Kalanjiyam, Saradha Pathippagam, Chennai, India.

Manickam, A. (2005) Thayumanavar Thiruppadalgal Moolamum Uraiyum, Vardhamanan Pathippagam, Chennai, India.

Manikkavasagan, G. (2006) Thirumoolar Aruliya Thirumanthiram, Uma Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License